# 25 ஆயிரம் ரூபா கடத்தல் பொருட்கள்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 136

யாழ்ப்பாணம் ஆனி 14 ஜூலை 4 திங்கட்கிழமை (28 6 71)

## விமானச் சிப்பந்தியின் சூட்கேசில்

கோட்டை, ஞாயிறு

இலங்கை விமானச் சேவையைச் சேர்ந்த சிப்பந்தி ஒருவரின் சூட்கேசில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்கள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் சிங்கப்பூரிலிருந்து கொண்டு வரப்பட்ட இச் சூட்கேசை சந்தேகத்தின் பேரில் சுங்கப்பகுதியினர் தடுத்து வைத்தனர். இச் சூட்கேசை இன்று சுங்கப்பகுதி அதிகாரிகள் திறந்து பார்த்த பொழுது 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விலை உயர்ந்த கால்சட்டைத் துணிகளும், கைக்கடிகாரம் ட்ரான்சிஸ்டர் நைலோன் சேலைகள் போன்ற பொருட்களும் இருக்கக்காணப்பட்டன.

கடத்தல் பற்றிய புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

—

## குருப்பூர்ணிமாவும் புண்ணிய திதியும்

அரியாலை ஞாயிறு

சுவாமி சிவானந்த மகரிஷியின் எட்டாவது புண்ணிய திதியும் குருப்பூர்ணிமாவும் வருகிற 8ம் திகதி நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கம் ஒழுங்கு செய்யும் இக் குருபூர்ணிமாவும் புண்ணிய திதி

(6-ம் பக்கம் பார்க்க)

# வட்டமேசை மகாநாடு கூட்ட பிரதமரிடம் கோரிக்கை

## பிரேதத்தை வழிமறித்து சொத்துக்களை கேட்டனராம்

### பொலிஸ் பாதுகாப்புடன் தகனம் நடந்தது

சங்கானை ஞாயிறு

பொலிஸ் பாதுகாவலுடன் பிரேதஊர்வலம் ஒன்று அண்மையில் பனிப்புலத்தில் நடைபெற்றது.

பனிப்புலத்தைச் சேர்ந்த சுந்தர் மீனாட்சி என்பவரின் பிரேதம் சுடலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அவரது உறவினரைச் சேர்ந்த சிலர் வழிமறித்து இறந்தவருக்குச் சொந்தமான பணத்திலும் உடமைகளிலும் தங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும் எனக் கோரியதாகவும் இதனால் பொலிஸ் பாதுகாப்பு நாடப்பட்டதாவும் தெரிகிறது.

பிரேதத்தைச் சுமந்து சென்றவர்களையும் வழிமறித்தவர்கள் தாக்கியதாக சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டது. உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து சென்ற சார்ஜன்ட் கொலவின்ஸ் தலைமையிலான பொலிஸ்கோஷ்டி குறிப்பிட்ட சடலத்தை பொன்னாலை நெல்லியான் சுடலைக்கு எடுத்துச்செல்ல பாதுகாப்பு அளித்தது. பிரேத ஊர்வலத்தின்போது குழப்பம் விளைவித்தவர்கள் மீது பொலிசார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## அரசியல் நிர்ணய சபையில் சாவகச்சேரி எம். பி.

[பெரி: சுந்தரலிங்கம்]

கொழும்பு, ஞாயிறு

'தமிழரசுக்கட்சி வன்முறையில் நம்பிக்கை வைத்ததில்லை. மொழிப் பிரச்னைக்கு இறுதித்தீர்வுகாணவே விரும்புகிறது. ஐ. தே. கட்சி-ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இருபெரும் கட்சிகள் உட்பட மற்றும் கட்சிகளைக்கொண்ட வட்டமேசை ஒன்றைக்கூட்டி மொழிப் பிரச்னைக்கு இறுதித்தீர்வுகாண பிரதமர் முன்வரவேண்டும்'

இவ்வாறு அரசியல் நிர்ணய சபையில் புதிய அரசியல் அடிப்படைத் திட்டத்தின் 11-வது தீர்மானத்திற்கு தமிழரசுக்கட்சி சமர்ப்பித்த திருத்தப் பிரேரணையை ஒட்டி நடந்த விவாதத்தின் பொழுது சாவகச்சேரி எம். பி. திரு வி. என் நவரத்தினம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் தமிழரசுக்கட்சி மொழிப் பிரச்னைக்கு [illegible]றுதித் தீர்வு காணவே விரும்புகிறது. காலஞ்சென்ற பண்டாரநாயக்கா இப்பிரச்னையைத் தீர்க்க முயன்ற பொழுது துரோகப்பட்டம் சூட்டப்பட்டார். இரு பெரும்கட்சிகளான ஐ. தே. க. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் இணக்கத்துடனேயே இறுதித்தீர்வு காண விரும்புகிறோம். மொழி, சமயம் ஆகிய பிரச்னைகளில் இவ்விதம் நடந்து சம்பந்தப்பட்ட மக்களின் சம்மதத்தைப்பெற்றாலே இவைத்தேர்தல் பிரச்னையாக்காமல் தீர்க்க முடியும். இந்தப்பிரச்னைக்கு சுமுகமான முடிவுகாண ஐ. தே. கட்சி உட்பட மற்றும் முக்கிய கட்சிகளைக்கொண்ட மகாநாடொன்றைக்கூட்டி மொழிப்பிரச்னையைத்தீர்க்க பிரதமர் முன்வரவேண்டும். நாங்கள் பிடிவாதக்காரர்களல்ல. முன்பும் விட்டுக் கொடுத்திருக்கிறோம், இப்பொழுதும் எமது கதவு திறந்தே இருக்கிறது. நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தவும் விட்டுக் கொடுத்து இணக்கம்காணவும் இப்பொழுதும் தயாராக இருக்கிறோம். பிரதமருடன் இதற்கு முன்பும் இது பற்றி பேச்வார்த்தை நடத்தியிருக்கிறோம். தமிழ் மக்களின் பிரச்னையைத் தட்டிக் கழிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கும் என்றுநாம் எண்ணமில்லை, அதேபோல் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டுமென்ற எண்ணமும் எமக்கில்லை என்றார்.

திருகோணமலை எம். பி. திரு. நேமிநாதன் பேசுகையில், ஐ. தே. கட்சி கட்டித்தழுவி எங்கள் கழுத்தை நெரித்தது. ஸ்ரீலங்கா சுதந்

6-ம் பக்கம் பார்க்க

## "கருணாநிதியின் சேவை முழுபாரதத்துக்கும் தேவை"

—சுப்பிரமணியம்

சென்னை, ஜூன் 27

"தமிழ்நாடு முதல்வர் கருணாநிதியின் சேவை தமிழ் நாட்டுக்கு மாத்திர மன்றி அகில இந்தியாவுக்குமே தேவையாயுள்ளது. அவரிடம் கலையும் அரசியலும் மிகுந்துகாணப்படுகின்றன."

கவிஞர் கண்ணதாசன் நடத்திய கருணாநிதி பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் திட்ட மந்திரி திரு. சுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்.

முதல் அமைச்சர் கருணாநிதியின் 48-வது பிறந்த நாளையொட்டி சென்னையில் கலை. இலக்கிய திருநாளை கவிஞர் கண்ணதாசன் கொண்டாடினார்.

இவ்விழாவின் போதுகாலையில் 'கண்ணோட்டத்தில் கருணாநிதி' என்ற தலைப்பில் பன்மொழிப்புலவர் அப்பாத்துரை தலைமையில் கவியரங்கமும், மாலையில் கருணாநிதியிடமிருப்பது 'கலையா, அரசியலா' என்ற தலைப்பில் ம. பொ. சி. தலைமையில் பட்டிமன்றமும் நடைபெற்றன.

சுக்கண்டு ஆசிரியர் தமிழ்வாணன், பி. சி. கணேசன் உட்படப் பலர் பட்டிமன்றத்தில் கலந்து கொண்டனர்.

கருணாநிதி இவ்விழாவில் பேசுகையில் காலையில் இங்கு நடந்த கவியரங்கத்தில் மதுவிலக்குப்பற்றி மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று கொத்தமங்கலம் சுப்பு பாடினார். மது இல்லாமல் மனிதன் வாழமுடியாது என்று கண்ணதாசன் பாடினார்.

காந்தி வழிநடந்த அண்ணாவும், அண்ணாவினால் உருவாக்கப்பட்ட நாங்களும் மதுவிலக்கு கொள்கையில் என்றும் உறுதி படைத்தவர்கள். மதுவிலக்கு தமிழ் நாட்டில் வெற்றிகரமாக செயல்படவில்லையென்பதை உணர்ந்துதான் இம்முடிவை எடுத்தோம்.

சுற்றிலும்கொழுந்து விட்டு எரியும் நெருப்புக் கோளத்தின்மத்தியில் கொளுத்தப்படாத கற்பூரமாக தமிழ் நாடு உள்ளது என்றார்.

## யாழ். நகரில் திருவாசக மன்றம் உதயம்

யாழ்ப்பாணம், திங்கள்

சைவ வழிபாட்டு வைபவங்களில் நால்வர் திருமுறைகளில் இடம் பெறுதல் முறையென்றும் அதிலும் மணிவாசகப் பெருமானின் திருப்பாடல்கள் அதிக முக்கியத்துவம் [illegible]றும் இந் நாளில் [illegible]வில் திருமுறைகள் அருகிவருவது வருத்தத்திற்குரியதென்றும் முதலியார் திரு. செ. சின்னத்தம்பி யாழ்ப்பாணத்தில் ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதியில் [illegible] வைக்கப்பட்ட திருவா[illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்மக்களின் உரிமைக்கு ஆதரவளிக்க நாம் தயார்

—ஹக்மன எம். பி.

இந்த விவாதத்தில் ஹக்மன எம். பி திரு ராஜபக்ஷ பேசுகையில் 1915, 1958, 1970-ம் ஆண்டு நிகழ்ச்சிகளை நாம் பின்னோக்கிப் பார்த்து தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்தை உணரவேண்டும். வட்டமேசை மகாநாடோ சதுர மேசை மகாநாடோ கூட்டி தமிழ்மக்களின் உரிமைகளை கொடுப்பதற்கு நாங்கள் ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் தமிழரசுக் கட்சி எம். பிக்கள் சில வேளைகளில் இங்கு பேசும் பேச்சுக்கள் விரோதமாக இருக்கிறது, ஆங்கிலம் இந்நாட்டில் ஆட்சிமொழியாக இருந்த காலத்திலுங்களும் அழிந்துவிடவில்லை என்று தமிழரசுக் கட்சியினர் இங்கு கூறினர், அப்படியானால் சிங்களம்ஆட்சி மொழியாவதால் தமிழ்

5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

விவசாய இரசாயனப் பொருட்கள் பற்றி அறிந்த அனுபவமுள்ள களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. பிணைப்பணம் ரூபா 2500/-. இருவர் உத்தரவாதமளிக்க வேண்டும். விண்ணப்பிக்கவும். ஒட்டோஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3218

### காணவில்லை

7-ம், 8-ம், 9-ம், 10-ம் தரவகுப்புகளுக்கு கலை, விஞ்ஞான, கணித பாடங்கள் புதிய பாடத்திட்டத்தின்படி ஜூலை 1-ம் திகதி தொடக்கம் நடைபெறும். விபரங்களுக்கு: 36, 3-ம், குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 3214

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 8—6—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6.00, இரவு 9 00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 கத்தோலிக்கநற்சிந்தனை 6-20 தனிப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 இசைவேளை, 8-00 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாதஸ்வரம்.

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 பக்திப்பாடல்கள், 6-30 கானமஞ்சரி, 7-15 நாடகம் — "கந்தையாண்ணே"— செங்கை ஆழியான், 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 புதிய அம்சம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## நேரம் முன்புபோல்

குருநகர், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நோயாளர்களை உறவினர்கள் பார்வையிடும நேரம் இம்மாதம் 26-ம் திகதி தொடக்கம் ஊரடங்கு சட்டம் அமுலாக்குவதற்கு முன்பிருந்தவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. நண்பகல் 12-00 மணிக்கும் 1-00 மணிக்குமிடையிலும் பிற்பகல் 5-00 மணிக்கும் 6-00 மணிக்குமிடையிலும் இப்போது நோயாளர்களை அவர்களது உறவினர்கள் ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் பார்வையிடலாம்.

## யாழ். மாநகரசபை கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகள் செய்வதற்கு யாழ் மாநகர சபையில் கட்டிட ஒப்பந்தகாரராகப் பதிவு செய்துள்ளவர்களிடமிருந்து 12-7-71 நண்பகல் 12-00 மணி வரை கேள்விகள் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்

1 தேவரிக்குளத்திற்கு அருகாமையில் பெண்கள் மலகூடம் அமைத்தல்- வட்டாரம் 4.

2. இலந்தைக்குளம் குழமாக்கல் - வட்டாரம் 8.

கேள்விக்காரர் அனைவரும் கேள்விகள் திறக்கபடும் 12-7-71 பி. ப. 3-30 மணிக்கு எனது அலுவலத்தில் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

யாழ் மாநகரசபை மராமத்துப் பொறியியலாளரிடம் 10-7-71 நண்பகல் 12-00 மணி வரை ரூபா 25/- ஒவ்வொரு வேலைக்கும் கேள்வி வைப்புப் பணமாகவும் ரூபா 5/- ஒவ்வொரு வேலைக்கும் படிவப் பெறுமதியாகவும் செலுத்திப் பெறப்படும் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்

ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்துகொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எல்லாக் கேள்விகளும் அரக்கு முத்திரையிடப்பட்டு இணைப்பிரதிகளுடன் கூடியதாக இருத்தல்வேண்டும். கடித உறையில் இடதுபக்க மூலையில் என்ன வேலைக்கென்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

மேல் விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
25-6-71. 2870

## கேள்வி விளம்பரம்

### மண்ணித்தலை— கல்முனை வீதி வேலை

குறித்த வேலைக்குக் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப்பணமாக ரூபா இருபதும் (20/-) பத்திரப் பணமாக ரூபா ஐந்தும் (5/-) கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொண்ட உத்தியோகபூர்வமான பத்திரத்திலேயே கேள்விகள் தயாரிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 10-7-71-ந் திகதி பி. ப. 4 மணி வரை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 12-7-71-ந் திகதி காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் தலைவர், கிராமசபை, பூநகரி என்னும் விலாசத்திற்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும். அதன் பிரதி ஒன்று யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.

காகித உறையின் இடது பக்க மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடவேண்டும். மேலதிக விபரங்களைக் கிராமசபைக் கந்தோரில் அல்லது யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

வை. வல்லிபுரம்,
அக்கிராசனர்,
கிராமசபை,
2871 பூநகரி.

## வாக்குவாதம்

குருநகர், ஞாயிறு

ஊர்காவற்றுறைப் பட்டின சபையில் ஒழுங்கற்ற முறையில் தொழிலாளர்கள் இருவரை நியமனம் செய்ததாக அண்மையில் நடந்த பட்டின சபையின் கூட்டத்தில் காரசாரமான விவாதம் நடந்தது. 21 வருடகாலம் இப் பட்டின சபையில் வேலை செய்த இரண்டு ஊழியர்களை நீக்கிவிட்டு இப்பட்டின சபைத் தலைவரால் முன்னர் இருதடவைகளில் தண்டிக்கப்பட்டிருந்த ஒருவருக்கும் வேறொருவருக்கும் நியமனம் கொடுத்திருப்பது பற்றி ஒரு அங்கத்தவர் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து இக்காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றது.

மின்சார விநியோகத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் மிஞ்சியுள்ள தொகையைச் வைத்தியசாலை அமைப்புக்கு செலவிடுவதெனவும் அதில் மிகுதிப் பணம் ஏற்படுமாயின் வட்டாரங்களுக்கு பகிர்ந்து செலவு செய்வதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## கொலை புரிந்ததை ஒப்புக்கொண்டனர்

காலி, சனி

சக கிராமவாசி ஒருவரை தடியால் அடித்துக்கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் ஒருதகப்பனும் மகனும் காலி அசைஸ் கமிஷனர் திரு. டி. இயு. எம் சிறிஜாவர்தன முன்னிலையில் கைமோசக்கொலை புரிந்ததாக ஒப்புக்கொண்டனர்.

1970 ஏப்பிரல் மாதம் 2-ம் திகதி அம்பாந்தோட்டைப் பகுதியில் வெலிபட்டனவில என்ற இடத்தில் டி. சி. டி. எதிரிவீர விஜயசூரிய என்பவரைக் கொலைசெய்ததாக எம். ஜே. பி சாரிஸ் என்பவரும் அவரது மகன் பிரேமதாஸ என்பவரும் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

முதல் எதிரியை ரூ. 500 பிணையில் விடுத்த அசைஸ் கமிஷனர் மூன்று ஆண்டுகளுக்கு நன்னடத்தைப்பிணையில் இருக்கவும் உத்தரவிட்டார். இரண்டாம் எதிரிக்கு ஏழு ஆண்டுகள் கடூழியச்சிறை விதிக்கப்பட்டது.


ராணி (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி. ப. 2-00 மாலை 5-30
ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த
ஜீவநாடி

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை 5.30
முத்துராமன் லக்ஷ்மி, நாகேஷ்— ராகினி
நடித்த
நவக்கிரகம்

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-45, மாலை 5-30 மணி
★ சிவாஜிகணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
பாசமலர்

கிங்ஸ்லி (கொழும்பு) விளாஸா
திரைகளில்
★ சிவாஜிகணேசன் ★ வாணிஸ்ரீ
முத்துராமன்-சோ-மனோரமா-குமாரி சச்சு
நடித்த
நிறைகுடம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 5-30
சிவாஜி—பானுமதி
நடித்த
அறிவாளி

நாகமஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி பி. ப. 2-00, 5-45
நாகேஷ்-செளகார் ஜானகி
நடித்த
கே. பாலச்சந்தரின்
நீர்க்குமிழி
காலை 10-30 காட்சி
James Mason
in
TIARA TAHITI

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
கண்ணன்
என் காதலன்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப 2 30, 5-30
எம் ஜி ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
சக்கரவர்த்தித்
திருமகள்

றீகல்— யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30
சிவாஜி-ஜமுனா-கண்ணாம்பா
நடித்த
மருதநாட்டு
வீரன்
Daily at 6-00 p. m
Burt Lancaster
in
SCALP HUNTERS
(Color)

யாழ். வின்ஸர் வெண்திரையில்
காலை 10-30, 2-00, மாலை 5-30
28-6-71 இன்று முதல்
★ ஜெமினிகணேசன் ★ விஜயகுமாரி
★ நாகேஷ், ★ ரமாபிரபா ★ ராஜ்ஸ்ரீ ★ அசோகன்
நடிக்கும்
மனைவி மக்களோடு பார்த்து மகிழவேண்டிய படம்
மனைவி

"யங் ஹாட்ஸ்"
விளையாட்டுக் கழகம்
விரைவில் ஆரம்பம்
'ரொம்பொல கேம்ஸ்'
தினசரி வேளைகள்
பி. ப. 4-30 முதல்
இரவு 8-30 வரை
புதிய அங்கத்தவர்கள்
சேர்க்கப்படுவர்
பல்மேறு
கொற்றேஜ்
85, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்

YOUNG HEARTS
SPORTS CLUB
Commencing shortly
Daily sessions
of
TOMBOLA GAMES
from
4-30 P.M —8-30 P.M.
MEMBERSHIP
Open
for New Members
PALMYRA COTTAGE
85, Main Street,
Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். வலுத்தாக்குதல் நடத்திஞல் பாரதம் பதிலடி கொடுக்குமாம்

புதுடில்லி, ஜூன் 27

பாரதம் ஆத்திரமூட்டும் போக்கை ஒருபோதும் கடைப்பிடிக்காது. ஆனல் வலுத்தாக்குதல் எதையும் பாகிஸ்தான் ஆரம்பிக்குமானல் இந்தியா அதற்கு சரியான பதிலடி கொடுக்கத் தயாராய் இருக்கின்றது என்று புதுடில்லியில் அரசாங்க அதிகாரிகள் கூறினர்.

பாகிஸ்தானியர் எல்லைப் பகுதிகளில் ஊடுருவல் செய்வது பற்றியும் ஜம்மு காஷ்மீர் பிரதேசத்திலும் இந்தியா மிகவும் கவனமாகவும் விழிப்பாகவும் இருந்து வருகின்றது என்று அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

வங்காள தேசத்தில் பெருமழை பெய்து வந்தபோதிலும் கடந்த சிலதினங்களில் ஒரு லட்சம் அகதிகள் இந்தியாவுக்குள் வந்திருக்கிறார்களாம்

டாக்காவிலிருந்து வெளிவரும் பீப்பிள் என்ற பத்திரிகையின் ஆசிரியர் இப்பொழுது இந்தியாவில் இருக்கிருர். வங்காளதேச மக்களின் துயரத்துக்காக பாரத தேச மக்களும் கவலைப்படுவது தங்களுக்கு எழுச்சியைத் தருவதாக அவர் புதுடில்லியில் கூறினர். இதுவரை சுமார் ஒருலட்சம் மக்கள் கொலை செய்யப்பட்டிருக்கிருர்கள் என்றும் எனினும் கடைசிவரை அவர்கள் போராடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னுள் பாகிஸ்தான் ராஜதந்திரியான திரு சகாவுதீன் வங்காள தேசத்தில் நடைபெறும் கொடுமைகள் குறித்து முஸ்லீம் நாடுகள் மௌனம்சாதிப்பது கவலையளிப்பதாய் இருக்கின்றது, என்றும் கூறினர்.

வங்காள தேசம் நனவாகிவிட்டது இனி அது பாகிஸ்தானுடன் சேர்வது முடியாத காரியம், பாகிஸ்தான் செத்துவிட்டது என்று திரு. சகாபுதீன் கூறினர்.

## 32வருட சேவையின்பின் ஓய்வு

குருநகர், ஞாயிறு

கடந்த 32 வருடங்களாக ஆசிரியப்பணியாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி திரேசம்மா பேக்மன் சென்ற மாதம் 16ம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளார். குருநகர் பெண்கள் பாடசாலையில் 7வருடங்களும் யாழ்ப்பாணம் கொன்வென்டில் 25 வருடங்களும் கடமையாற்றிஓய்வு பெற்றுள்ள இவரது சேவையைப் பாராட்டி கொன்வென்ட் பாடசாலை ஆசிரியர்களால் இம்மாதம் 23-ம் திகதி நடத்தப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் இவருக்கு தங்கச்சங்கிலி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது இவரது சேவையைப் பாராட்டி சகி. தாய் மேரி விக்ரரின், திருமதி நீக்கிலஸ், திருமதி வேலுப்பிள்ளை ஆகியோர் பேசினர்.

---

## சேனைப்பயிர் செய்கைக்குக்காணி

நெடுங்கேணி ஞாயிறு

வவனியா வடக்கு காரியாதிகாரி பிரிவில் மொத்தம் 100 ஏக்கர் காணி சேனைப்பயிர் செய்கைகளுக்காக வழங்கப்படஉள்ளது.

இக்காணி ஒவ்வொரு ஏக்கர் வீதம் வழங்கப்படும். இதற்கான காணிக்கச்சேரி ஜூலை மாதம் 13ந் திகதி நெடுங்கேணிக் பிரிவுக் காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. காணிக்கு விண்ணப்பிக்கும் கடைசித் திகதி ஜூலை 7 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

......

## இராணுவத்தினர் 50 சதத்துக்கு விற்றனர்

அம்பன், ஞாயிறு

மருதங்கேணிச் சந்தையில் ஒருகொத்து சின்னவெங்காயம் ரூ 1-25 சதத்துக்கு வியாபாரிகள்விற்றுக்கொண்டிருக்கையில் இராணுவத்தினர் குறுக்கிட்டு ஒருகொத்து சின்னவெங்காயத்தை 50சதத்துக்கு பாவனையாளர்களுக்கு விற்பனை செய்வித்தனர்.

## சோவியத் விண்வெளி விஞ்ஞானி காலமானர்

மாஸ்கோ, ஜூன் 27

சோவியத்விண்வெளித்திட்டத்துக்குப் பெரும் அனுசரணையாகவிருந்த விஞ்ஞானியான அலக்ஸி இசய்யா காலமாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு வயது 62. வொஸ்டொக், வொஸ்டோஸ், சோயிஸ் ஆகிய வெளிக்கிரகங்களின் எஞ்சின் கருவிகளை இவரே வடிவமைத்தவர். விண்வெளியில் உலவிய முதல் மனிதனை யூரிககாரின் பிரயாணம் செய்த கலத்துக்கும் இப்பொழுது மூன்று வீரர்கள் உலகைச் சுற்றிவரும் சோயுஸ் கலத்துக்கும் எஞ்சின் கருவிகளை வடிவமைத்தவர் இவர் என்று நம்பப்படுகின்றது.

உலகம் சுற்றும்

## பிரி. வைத்தியக் குழு இங்கும் வரும்

லண்டன். ஜூன். 27

பிரிட்டிஷ் வைத்திய ஆராய்ச்சிக் கோஷ்டியொன்று விரைவில் உலகம் சுற்றும் பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறது. விசேஷமாக அமைக்கப்பட்டுள்ள மோட்டார்வான் ஒன்றில் பயணமாகும் இக் குழுவினர் இலங்கை, இந்தியா. பாகிஸ்தான் உட்பட 29 நாடுகளூடாக உலகத்தைச் சுற்றி வருவார்கள். இவர்களது சுற்றுப்பிரயாணம் முடிவடைய மூன்று ஆண்டுகள் பிடிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஐவர் அடங்கிய இந்த தூதுக்குழுவிற்கு திரு. ஆர்த்தர்கைய் என்ற விரிவுரையாளர் ஒருவர் தலைமை தாங்குவார். சுகாதாரம், சமூகநலன், கல்விமுறை பொழுது போக்கு போன்றன சம்பந்தமாக சர்வதேச ரீதியன ஆராய்ச்சியை இவர்கள் மேற்கொள்வார்கள். அறிவு வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்குப் பயிற்சி அளிப்பதையே பிரதான அக்கறையாகக் கொண்ட திரு. ஆர்ந்தர்கைய் தாம் விஜயம் செய்யும் நாடுகளிலுள்ள வைத்தியசாலைகளைச் சுற்றிப்பார்வையிட திட்டமிட்டிருக்கிருர்

பிரிட்டனிலிருந்து புறப்படவிருக்கும் இக் கோஷ்டியினர் ஐரோப்பா ஊடாகச் சென்று பின்னர் துருக்கி, பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, ஹொங்கொங், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் வழியாக தாயகம் திருப்புவார்கள்.

பத்தேகம கொலைவழக்கு

## எதிரிகள் அப்பீல்

காலி, ஞாயிறு

பத்தேகம நால்வர் கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட நால்வரும் அசைஸ்கோட் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் கோட்டுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

கடந்த 8 தினங்களாக நடைபெற்ற மேற்படி கொலைவழக்கில் கே பி. ஜி. விக்சன், தசாபந்து குமாரசிறி, யு ஜி. நந்தபாசா, என் டபிள்யு. டபிள்யு. யு. குணசேன ஆகியோருக்கு உயர்நீதிமன்ற கமிஷனர் திரு டி. கியூ. எம் சிறிமான மரணதண்டனை விதித்தது தெரிந்ததே

இவர்கள் இ. போ. ச. பஸ் ஒன்றில் வைத்து ஒரே குடும்பத்தைச்சேர்ந்த நால்வரைக் குத்திக்கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

......

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம். திங்.

சாவகச்சேரி மண்டுவில் ஸ்ரீ கண்ணகாம்பிகாதேவி புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இம்மாதம் 30-ம் திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கிறது. இதற்கான கிரியைகள் 28-ந் திகதி காலை ஆரம்பமாகும். இவ்வைபவத்தை பிரதிஷ்டா குரு பிரம்மஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் தலைமை வகித்து நடத்திவைப்பார்.

மசோதா நிறைவேறியது

## விசாரணையின்றிக் காவலில் வைக்க அதிகாரம்

புதுடில்லி. ஜூன் 27

நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியவர்களை விசாரணை இல்லாமலேயே தடுப்புக் காவலில் வைப்பதற்கு அதிகாரம் வழங்கும் மசோதா ஒன்றை இந்திய ஆட்சிமன்றம் நிறைவேற்றியுள்ளது.

1969-ம் ஆண்டில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டபோதிலும் ஆட்சிமன்றத்தில் போதிய ஆதரவில்லாமலிருந்ததால் புதுப்பிக்க முடியாமல் காலாவதியான அது ஆபத்து தவிர்ப்பு தடுப்பு மசோதா மீண்டும் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்டுள்ளது.

## அணு வல்லரசுகளுக்கு ரஷ்யா அனுப்பிய அறிக்கை

மாஸ்கோ ஜூன் 27

அணு வல்லரசுகள் மகாநாடொன்றைக் கூட்ட சோவியத் யூனியன் முயற்சி எடுத்துவருகிறது அல்லவா] இதுசம்பந்தமாக அந்த அரசாங்கம் ஏனைய வல்லரசுகளுக்கு விடுத்துள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:-

"மனிதவர்க்கம் உலகமகாயுத்தத்தின் பின்னர் கால்நூற்றுண்டைக் கழித்துவிட்டது. சமாதானம் நிலைபெற்று உள்ளது. உலகில்பல பிராந்தியங்களில் இராணுவ நெருக்கடிகளும் யுத்தக்கெடுபிடிகளும் தோன்றியுள்ளன. சர்வதேச ரீதியிலான இராணுவ நெருக்கடிகளின் அபாயம்தோன்றியுள்ளது" என்று அமெரிக்கா, சீனு, பிரான்ஸ் பிரிட்டன் முதலிய அரசாங்கங்களுக்கு விடுத்துள்ள அந்த சோவியத் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்தஅறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'முக்கியமாக ஆயுதப்போட்டிகள் அனைத்து உலக வாழ்க்கைக்கும் எதிர்மாறுன விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இது சமாதானத்துக்கு எதிரான பயமுறுத்தல்கள் வளர்வதற்கு உதவுகிறது. பேரச்சம் தரவல்ல பொருட்களையும் ஆய்வறிவு முறைகளையும் மாற்றுவதன் மூலம் மக்களது நல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருளாதார சமூக முன்னேற்றங்களின் வளர்ச்சிக்கு அவற்றை உபயோகப்படுத்த முடியும். அணு ஆயுதப் போட்டி மாபெரும் பயமுறுத்தலாக விளங்குகிறது. மக்களின் எதிர்காலம் குறித்து இது முக்கியமாக எச்சரிக்கின்றது."

இது அனைத்து அணு வல்லரசுகளினதும் முக்கிய கடமை என்று சோவியத் அரசாங்கம் நம்புகிறது. அணு ஆயுதக் குறைப்புக்கு தேவையான நடவடிக்கைகளை இவை செயல்படுத்த வேண்டும். ஒரு அல்லது சில அணு வல்லரசுகள் மட்டும் இப்பணியைச் செய்துவிட முடியாது அணு ஆயுதங்களை உடைய வல்லரசுகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து எடுக்கும் நடவடிக்கைகள் மூலமே இது சாத்தியமாகும் இதுவரைக்கும் அணு வல்லரசுகள் அணு ஆயுதங்களை தடைசெய்வதற்கான ஒரு சிறு முயற்சியைத்தானும் எடுக்கவில்லை இந்தப் பிரச்னைகுறித்து அவற்றின் அபிப்பிராயங்கள் வேறுபட்டுள்ளன. அணு வல்லரசுகள் ஒன்றுபட்ட உழைப்பின் மூலம் தங்கள் அபிப்பிராயங்களை ஒன்றுபடுத்துவதன் மூலம் அணு ஆயுதங்களை ஒழிக்கும் முயற்சியை மேற்கொள்ள முடியும், இது மக்களினதும் அணு வல்லரசுகள் உட்பட அனைத்து நாடுகளினதும் அணு ஆயுத ஒழிப்பின் ஆர்வத்தால் நெறிப்படுத்தப்படுகிறது.

......

## வாஞெலியில்

அரியாலை, ஞாயிறு

இலங்கை வாஞெலியில் அடுத்த மாதம் 15-ம் திகதி சைவசமயத் தத்துவத்தில் 'பதியின் இயல்பு' என்னும் தலைப்பிலும் 30-ம் திகதி காலை 'பசுவின் இயல்பு' என்னும் பொருள்பற்றியும் இலங்கை இந்துசமய பிரசாரசபை தலைவர் இரா. சிவசுப்பிரமணியம் உரையாற்ற உள்ளார்.

# மேற்கு வங்கத்தில் விரைவில் தேர்தல் நடத்தக் கோரிக்கை

கல்கத்தா, ஜூன் 27

மேற்கு வங்காள மந்திரி சபையை ராஜிஞமா செய்யும்படி ஐக்கிய முன்னணியைச்சேர்ந்த கட்சியினர்வற்புறுத்தியுள்ளனர்.

மேற்குவங்காளத்தில் முதலமைச்சர் திரு அஜாய்முகர்ஜியின் யோசனையின்பேரில் கவர்னரால் சட்ட சபை கலைக்கப்பட்டுள்ளது. சட்ட சபை கலைக்கப்பட்டாலும் மந்திரி சபை தொடர்ந்து செயலாற்றும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்க்கட்சிகளின் கூட்டணி வன்மையாக ஆட்சேபித்துள்ளன.

நேற்று ஆளும் கட்சிகளின் ஐக்கிய முன்னணி கூட்டம் திரு. அஜாய்முகர்ஜியின் தலைமையில் நடைபெற்றது சட்டசபையைக் கலைக்கும் [illegible] செய்கையை கூட்டம் ஏற்றுக் கொண்டது. ஆனல் மந்திரி சபை தொடர்ந்து பதவியிலிருப்பதைக் கூட்டம் ஆதரிக்கவில்லை. மந்திரி சபை உடனே ராஜிஞமா செய்துவிட்டு புதிய தேர்தலுக்கு வழி செய்யவேண்டும் என்று கூட்டம் முடிவுசெய்தது.

மந்திரி சபை தொடர்ந்து பதவியிலிருப்பதை மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணிவன்மையாகக் கண்டித்தது. மந்திரி சபை உடனடியாக பதவியிலிருந்து விலகிவிட்டு பொதுத்தேர்தலுக்கு வழிசெய்யவேண்டும் என்று இந்தக் கட்சிகளும் வலியுறுத்தியுள்ளன.

இப்போதுள்ள நிலையில் உடனடியாக பொதுத்தேர்தல் நடைபெறமாட்டாதென்றும் ஜனதிபதி ஆட்சியே பிரகடனப்படுத்தப் படலாம் என்றும் அவதானிகள் கருதுகிருர்கள்.

மேற்குவங்காள மாநிலத்துக்கான இவ்வருட பட்ஜெட் இன்னமும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சட்டசபை கலைக்கப்பட்டுவிட்டதால், பட்ஜெட்டை பாரிமெண்டில்தான் நிறைவேற்ற வேண்டும். ராஜ்யத்தில் ஜனதிபதி ஆட்சி இருந்தால் மாத்திரமே பட்ஜெட்பாரிமெண்டில் சமர்ப்பிக்கப்படலாம். ஆனல் ராஜ்யத்தில் இப்பொழுது மந்திரிசபை மாத்திரமே இருக்கின்றது. எனவே பட்ஜெட் முடிவுகளை மந்திரி சபை எடுக்க முடியாது

மந்திரி சபை பதவியிலிருந்து விலகுவது பற்றி இன்று மந்திரிகள் கூடி தீர்மானிக்கவிருக்கின்றனர். இவர்களின் முடிவு இன்று மாலை அல்லது நாளை தினம் கவர்னரிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ப. நோ. கூ. சங்கத்தை புதிய நிர்வாகம் கைபோற்றது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை நேற்று திரு. அல்பிரட் துரையப்பா தலைமையிலான இயக்குனர் சபை பொறுப்பேற்றுக்கொண்டது. இந்த சங்கத்தின் கீழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ள 38 கிளை டிப்போக்கள் இயங்கும்.

இச் சங்கத்தின் பழைய கமிட்டி நேற்று முதல் செயலற்று போனது. 6 மாத காலத்திற்குள் பழைய கமிட்டி உறுப்பினர்கள் ஒரு கமிட்டியை உருவாக்கி ஆலோசனை வழங்கமுடியும். ஆனால் முன்பு உள்ளதுபோல இவர்களுக்கு அதிகாரங்கள் இருக்காது.

சங்கத் தலைவர் திரு அல்பிரட் துரையப்பா நேற்று கிளை டிப்போக்களுக்கும் சங்கத்திற்கும் சென்று அங்குள்ள இருத்தவேலைகளில் கவனம் செலுத்தினர்.

நுகர்வோர் ஒவ்வொருவருக்கும் பிரதான ஸ்ரோரிலிருந்து கிடைக்கும் சகலபாவனை பொருட்களும் கிடைக்கவழி செய்வது தான் எனது முதலாவது குறிக்கோள் என்று திரு அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஒவ்வொரு கிளை டிப்போக்களிலும் முறைப்பாட்டு புத்தகம் இருக்கும். நுகர்வோர் தங்களுக்குள்ள குறைகளை அந்தப் புத்தகத்தில் எழுதிக்கொள்ளலாம். இது தவிர நுகர்வோர் முறைப்பாடுகளை தலைமைக் காரியாலயத்துக்கும் உடனுக்குடன் அறிவிக்கலாம்.

பிரதான ஸ்ரோரிலிருந்து என்னென்ன பாவனைப் பொருட்கள் கிளை டிப்போக்களுக்கு வழங்கப்படுகிறது என்பது ஒவ்வொரு கிழமையும் பத்திரிகையில் வெளிவரும். இதன்மூலம் நுகர்வோர் தங்களுக்குத் தேவையானவற்றை கிளை டிப்போக்களில் பெற்றுக்கொள்ளலாம். பிரதான ஸ்ரோரிலிருந்து வழங்கப்பட்டு கிளை டிப்போக்களில் பெறமுடியாத சாமான்கள் எதுவும் இருந்தால் உடனே தலைமைக்காரியாலயத்துக்கு அறிவிக்க வேண்டும்.

ஜூலை 1ம் தேதி முதல் காலை 9மணி முதல் 1 மணி வரையும் பிற்பகல் 2 மணி முதல் 6மணிவரையும் ஒவ்வொரு கிளை டிப்போக்களும் திறந்திருக்கும்.

# திருப்பெருந்துறை எங்கே உள்ளது?

மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்தைப் படிப்பவர்கள் அதிலுள்ள பல பதிகங்களில் 'திருப்பெருந்துறை' என்னும் பெயர் அடிக்கடி வருவதைக் கண்டு ஆச்சரியப் படுவார்கள். பாண்டிய மன்னனுக்கு குதிரை வாங்கப் போகும் வழியில், சிவபெருமான் ஓர் ஆசிரிய ரூபத்தில் வந்து குருந்தமர நிழலில் திருவாதவூரருக்கு உபதேசம் செய்து மாணிக்கவாசகர் என்ற பெயரையும் சூட்டி தடுத்தாட்கொண்ட ஸ்தலம் தான் திருப்பெருந்துறை. அந்த ஸ்தலத்திலேயே பல பதிகங்கள் பாடப்பெற்றுள்ளன.

ஆயினும் வேறு ஸ்தலங்களைத் தரிசித்து பதிகம்பாயடி போதும் திருப்பெருந்துறையின் பெயர் அவற்றிலும் வருகிறது உதாரணமாக தில்லையில் பாடிய கீர்த்தித் திருவகவலில் 'திருவார் பெருந்துறைச் செல்வன்' என்றும், திருவண்டப் பகுதியில் 'திருவார் பெருந்துறை வரையில் ஏறி' என்றும், போற்றித் திருவகவலில் 'பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்' என்றும், திருவண்ணாமலையில் அருளிய திருவம்மானையில் 'சித்தனை வந்துருக்கும் சீரார் பெருந்துறையான்' என்றும், திருக்கழுக்குன்றத்தில் பாடிய குரு தரிசனத்தில் 'பேணுந்த பெருந்துறைப் பெருந்தோணி' என்றும், திருவாரூரில் அருளிய திருப்புலம்பலில் 'விரிபொழில் சூழ் பெருந்துறையாய்' என்றும் வருவதைக் காணலாம்.

மற்ற நாயன்மார்கள் செய்த பாடல்களில் ஒரு ஸ்தலத்தின் பெயர் அந்த ஸ்தலத்தில் பாடிய பதிகத்திலேயே பெரும்பாலும் வருகிறது. ஆனால் மாணிக்கவாசகருக்கோ சென்ற இடமெல்லாம் திருப்பெருந்துறையின் நினைப்பே உண்டாகிறது. இப்பேர்ப்பட்ட அந்த ஸ்தலம் இப்பொழுது எங்கே உள்ளது?

இதைப்பற்றி பல விதமான அபிப்பிராயங்கள் கூறப்படுகின்றன. 'திருப்பெருந்துறை எங்கே இருக்கிறது? ஈரோட்டுக்கு அருகில் பெருந்துறை என்ற ஊர் இருக்கிறது அது திருப்பெருந்துறை அன்று. திருப்பெருந்துறை என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு போனால் அந்தத்தலம் இருக்கும் இடம் தெரியாது ஆவுடையார் கோயில் என்றால்தான் இந்தக் காலத்தில் எல்லோருக்கும் தெரியும். கோயில் கணக்கில் ஆவுடையார் கோயில் என்று பதிவாகிறது. திருவாசகத்திலோ திருப்பெருந்துறை, சிவபுரம் என்று பெயர் பெற்றிருக்கிறது. தோரம், புராணம் இவற்றைப் புரட்டிப் பார்த்தால் 'இதுதான் ஆதி கைலாசம், இதுவே குருந்தவனம், சதுர்வேதபுரம், ஞானபுரம், தேசுவனம், யோகபீடபுரம் என்று வரிசையாக அவை அடுக்குகின்றன. இவ்வளவு இருந்தாலும் ஆவுடையார் கோவில் என்றால் எளிதில் யாவரும் தெரிந்து கொள்வார்கள். ஆவுடையார் கோவிலாகிய திருப்பெருந்துறை எங்கோ ஒரு மூலையில் இருக்கிறது அறந்தாங்கி ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி ஒன்பது மைல் பஸ்ஸில் போக வேண்டும். இவ்வாறு எழுதுகிறார் அறிஞர் திரு கி. வ. ஜெகந்நாதன்.

மாணிக்கவாசகர் மற்ற நாயன்மார்களுக்கு முற்பட்டவர். அவர் வாழ்ந்த காலம் நாலு-ஐந்தாம் நூற்றாண்டு என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்கள். இவ்வளவு காலம் சென்று விட்ட போதிலும் 'திருப்பெருந்துறை' என்ற பெயர் மறைந்து "ஆவுடையார் கோவில்" என்ற பெயர் வந்தது எவ்விதம் என்று விளக்கம் எதுவுமில்லை.

இலங்கையிலுள்ள மாதோட்டமே திருப்பெருந்துறை என்றும் அங்கேயுள்ள ஸ்தலமாகிய திருக்கேதீஸ்வரத்தையே மாணிக்கவாசகர் தரிசித்திருக்கலாம் என்றும் வேறு சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். மாதோட்டம் மாணிக்கவாசகர் காலத்தில் ஒரு பெரியதுறையாக விளங்கியதென்பதற்கு சரித்திரச் சான்றுகள் உள்ளன இருந்தாலும் திருக்கேதீஸ்வரம் தான் திருப்பெருந்துறை என்று உறுதியாக கூறுவதற்கு தர்க்கரீதியான சான்றுகள் வேறில்லை.

பேரறிவாளரும் மகாஞானியுமாகிய ஸேர் பொன்னம்பலம் அருணாசலம் பின்வருமாறு எழுதியுள்ளார்: 'இறைவனுடைய வீடுகள் என்று கருதப்படும் கோயில்களும் தேவாலயங்களும் அவருடைய கிருபையின் வெள்ளத்தால் பரிசுத்தமாக்கப்பட்ட மனித உள்ளமாகிய அவரது உண்மையான உறைவிடத்தை அடையும் மார்க்கங்களேயாகும் அவர் அங்கே உறைந்து விட்டால் சாதி, மதம், பால், உற்றார் மாற்றார் என்ற வேறுபாடுகள் அற்றுப் போகும் ஆலய வழிபாடும், பிரார்த்தனைகளும், தொண்டுகளும் பக்தியோகத்தின் சாதனைகள். அவற்றின் நோக்கம் சகல ஜீவாத்மாக்களிடத்தும் அன்பு காட்டிபடிப்படியாக மனசைத் தூய்மைப்படுத்தி, அதை இறைவனின் உறைவிடம், சிவபுரம் அவருடைய "பெரிய திவ்ய ஸ்தலம்" (திருப்பெருந்துறை) ஆக்குவதே மாணிக்கவாசகரோடு தொடர்புடைய ஒரு கோவிலின் பெயரும் திருப்பெருந்துறையே. கடவுளின் உறைவிடமாகிய உள்ளத்தைத் தான் பரலோக ராஜ்யம் என்றும் அது 'உனக்குள்ளேயே இருக்கிறது' என்றும் யேசுகிறிஸ்துநாதர் சொன்னார்.

திருப்பெருந்துறைப் பெயர்க்காரணத்தை கடவுண்மாமுனிவர் ஒரு செய்யுளில் அழகாக விளக்கியுள்ளார்.

வெம்பிறவி வேலைதனில்
வீழ்பவர்களெல்லாம்
நம்புசிவ நாமமெனு
நற்புணை பிடித்தாங்
கெம்பனருட் கரையேறு
துறையாமால்
அம்புவி மொழிந்தன
பெருந்துறை யதன்பேர்.
இப்பொழுது திருப்பெருந்
துறை எங்கே இருக்கிறது?

[நேற்று மணிவாசகர்விழா சைவஉலகமெங்கும் கொண்டாடப்பட்டது]

[வி. என் பி.]

# "2-ம் தர சிங்களத் தேர்ச்சி விதியைத் தளர்த்துக"

## அமைச்சருக்கு சங்கம் மகஜர்


குருநகர், ஞாயிறு

"சிங்களம் படிப்பதற்கு முயன்று கொண்டிருக்கும் தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களுக்குச் சிங்களத்தைப் படித்து முன்னேறுவதற்குச் சந்தர்ப்பத்தையும், உதவிகளையும் கொடுத்துதவ அரசாங்கம் முன்வரவேண்டும். சிங்களத்தைப் படித்தவரும் அரசாங்க ஊழியர்களுக்கும் சிங்களத்தைப் படிக்க மறுத்தவரும் அரசாங்க ஊழியர்களுக்கும் ஒரே மாதிரியான தண்டனையைக் கொடுப்பதும் நிர்ப்பந்திப்பதும் நியாயமாகாது."

இவ்வாறு கூறும் கடிதம் ஒன்றை அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கம் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியுள்ளது. அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

1956ம் ஆண்டின் பின்னர் கடந்த 13 வருடங்களாகத் தமிழ்பேசும் அரசாங்கச் சேவையாளர்களுக்குச் சிங்களமொழியில் தேர்ச்சிபெறுவதற்கு இயலாதிருந்தது. சிங்கள மொழியில் அவர்களுக்குள்ள வெறுப்பினால் என்று கருதும் சிலர் இருக்கலாம். அது தவறு. சிங்களம் மட்டும் சட்டம் அமுலாக்கப்பட்டதிலிருந்து அதை எதிர்த்துப் படிக்க மறுத்த ஒருசிலரும் இருக்கலாம். ஆனால் சிங்களம் படிக்க முயன்று கொண்டு வசதியீனங்களால் சித்திபெறமுடியாமல் இருப்பவர்களை இவர்களது தரத்தில் கணக்கிடமுடியாது. எனவே சிங்களத்தைப் படிக்கமுயலும் தமிழ் ஊழியர் பலருக்கு அதற்குரிய வசதிகள் சரியாகச் செய்துகொடுக்க அரசாங்கம் கடமைப்பட்டிருக்கின்றது. சேவையில் உள்ள சிங்களம் படித்த கனிஷ்ட ஊழியர்களுக்கும், மற்றும் தரத்தில் உள்ள ஊழியர்களுக்கும் தேவையான வசதிகள், உயர்வுகள் கொடாதிருப்பதும், தமிழ்மொழி மூலம் சிங்களத்தைப் பயில ஆசிரியர்களை உதவாதிருப்பதும், ஊழியர்கள் சிங்கள வகுப்புகளுக்குச் செல்ல வசதிகள் இல்லாதிருப்பதும் இவர்கள் சிங்களத் தேர்ச்சிபெறுவதற்கு இடையூறாக இருக்கின்றதென எமது சங்கம் கருதுகின்றது. ஆகவே இந்த நிலையில் இவர்களைத் தண்டிப்பதால் பலன் எதுவும் இருக்குமென நாம் கருதவில்லை.

யாழ்ப்பாணப் பகுதியில் வேலைசெய்யும் ஊழியர் சிங்களம் கற்பதற்கு எவ்வித வசதியும் இருப்பதாகத் தெரியவில்லை இந்நிலையில் திறைசேரியின் 701ம் இலக்க சுற்றறிக்கையின்படி கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் சிங்களத்தேர்ச்சியடையவில்லையென்று குற்றம் சாட்டமுடியாது. அரசகரும மங்களைச் செய்வதற்கு கனிஷ்ட சேவையாளர்களுக்கும் அதற்குக்கீழ்ப்பட்ட தரத்தையுடைய சேவையாளர்களுக்கும் 2ம் தர அரசகரும மொழித் தேர்ச்சிப்பரீட்சை சித்திபெய்தவேண்டுமென்று கூறியிருத்தல் எந்த வகையிலும்பொருத்தமற்றதாகும். பல ஊழியர்கள் இதனால் கஷ்டமடைகின்றனர். எனவே அரசகரும மொழியைப்படிக்கவிரும்பும் உத்தியோகஸ்தர்களுக்கும், படிப்பதற்கு முயன்று கொண்டிருக்கும் ஊழியர்களுக்கும் 2-ம்தரப் பரீட்சை விதியை கட்டாயப்படுத்தாது தளர்த்தி உதவவேண்டும்."



காலதேவனின் கைக்கைப்பட்டு ஓராண்டின் முன் அமரத்துவம் பெற்றுள்ளவர் திரு அல்பிரட் துரைசிங்கம்.

யாழ்ப்பாணம் நாவாந்துறை சென். மேரிஸ் உதைபந்தாட்டக் குழுவின் வெற்றியைப் பற்றியறிந்தவர்கள் திரு. அல்பிரட் துரைசிங்கத்தை அறியாமலிருக்கமுடியாது நீண்டகாலமாக நாவாந்துறையின் மேற்படி குழுவில் இயக்க முக்கியஸ்தருள் ஒருவராக விளங்கியவர் இவர். ஊரின் எந்த முற்போக்குச் செயல்களிலும் இவர் முன்னின்று உழைத்தவர்.. (இ. நா.)

## புதிய நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாநில விவசாய வித்தியாதிகாரியாக பருத்தித்துறை புலோலி மேற்கைச் சேர்ந்த செல்வி திலகா பெரியதம்பி இம்மாதம் 16ந் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியையாக இருந்து பின்பு விவசாயப் பாட வழிகாட்டித் புத்தகங்கள் கல்வியமைச்சுக்கு விசேடமாக அழைக்கப்பட்டிருந்தார்.

## பால்மா இல்லை

சுழிபுரம், ஞாயிறு

தொல்புரம் அரசினர் வைத்தியசாலைச் சிறுவர் நல சிகிச்சை நிலையத்தில் சுழிபுரம் கிராமசபையினரால் வழங்கப்பட்டுவரும் இலவச பால்மா இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. போதிய பால்மா கையிருப்பில் இல்லாமையே இதற்குக் காரணம். பால்மா கிடைக்காததால் இப் பகுதியில் உள்ள ஏழைக் குழந்தைகள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

## புனிதஇராயப்பர் சின்னப்பர் ஆலய திருவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

நவாலி புனித இராயப்பர் சின்னப்பர்கோவில் திருவிழா நாளை காலை நடைபெறவுள்ளது.

காலை 7மணிக்குப் பாடற்பூசையும் அதைத்தொடர்ந்து திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும் நடைபெறும். ஆடி 2-ம் திகதி காலை மடுமாதா திருநாளும் அதே கோவிலில் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய பூசை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

## இடமாற்றம்

சுழிபுரம், ஞாயிறு

சில்லாலை கிராமத்தின் பொது மருத்துவத் தாதியாகக் கடமையாற்றிய செல்வி எஸ். அழகம்மா இம்மாதம் தொடக்கம் பண்டத்தரிப்பு பட்டினசபை பகுதிக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

## ஒருநாள் சம்பளம் வழங்கினர்

யாழ்ப்பாணம், திங்கள்

கொக்குவில் கலட்டி சைவ வித்தியாசாலை ஆசிரியர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை பயங்கர புனர்வாழ்வுத் திட்டத்திற்கு வழங்கியுள்ளனர்.

## சிரமதானம்

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டைத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இளைஞர் மன்றமும் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபருமான திரு வை இராசசுந்தரம் [illegible] பாடசாலையைச் சேர்ந்த இந்நாள் பழைய மாணவர்களும் சக ஆசிரியர்களும் வழுக்கம்பரை அம்மன் கோவில் வீதியை சிரமதான முறையில் சுத்தம் செய்தனர்.

கோவில்நான்கு வீதிகளும் நன்குசுத்தம் செய்யப்பட்டுள்ளன.

கரபந்தாட்ட வாரவிழா:

# வலி. வடக்கில் 9 புதிய மைதானங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

விளையாட்டமைச்சினுல், நாடுபூராவிலுமுள்ள காரியாதிகாரிப் பிரிவுகளிடையே தற்போது "கரபந்தாட்ட வார விழா" மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ்விழாவை முன்னிட்டு வலிவடக்கு உடுவில் பகுதியில் ஒன்பது புதிய கரபந்தாட்டத் திடல்கள் திறக்கப்பட்டன. இவற்றின் விபரம் வருமாறு:

மல்வத்தை விளையாட்டுக் கழகத் திடலையும், இணுவில் அண்ணு விளையாட்டுக் கழகத் திடலையும், இணுவில் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத் திடலையும், வலிவடக்குக் காரியாதிகாரி திரு பி எம். பற்றிக் திறந்து வைத்தார்.

உடுவில் கிராமக் விளையாட்டுக் கழகத் திடலை சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கம் திறந்து வைத்தார்.

அளவெட்டி அண்ணு விளையாட்டுக் கழகத் திடலையும், மல்லாகம் சர்வோதய சனசமூக நிலையத் திடலையும், மல்லாகம் கிராமச் சபைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் திறந்து வைத்தார்.

தாவடி சிவசக்தி சனசமூக நிலையத் திடலையும், உடுவில் உதயசூரியன் சனசமூக நிலையத் திடலையும், வடமாநில கல்வி உடற்பயிற்சி பிரதம ஆலோசகர் திரு. ஆர். எஸ் சிவரத்தினம் திறந்து வைத்தார்.

இவ் விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் வலிவடக்கு உடுவிற் பகுதி விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. அ. முருகையா மேற்கொண்டிருந்தார். (தே நி)

......

## தாச்சிப் போட்டி

மாவிட்டபுரம், ஞாயிறு

விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் தாச்சிச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த மயிலிட்டி வடக்கு கிழக்கு வாலிபர்கள் ஏற்பாடுசெய்து வருகின்றனர்.

......

## கிரிக்கெட் போட்டி ஆரம்பம்

பருத்தித்துறை ஞாயிறு

இம்மாதம் 29-ம் திகதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி இரண்டாவது கிரிக்கெட் கோஷ்டிக்கும் சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கோஷ்டிக்கு மிடையில் ஹாட்லி மைதானத்தில் கிரிக்கெட் போட்டி நடைபெறும். இப்பருவத்தில் நடக்கும் கிரிக்கெட்போட்டி இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

......

## தமிழ்மக்கள்...

1ம் பக்கத் தொடர்ச்சி

மொழி அழிந்து விடும் என்று அவர்கள் ஏன் எண்ணவேண்டும் இந்நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க நாம் முயல வேண்டும் என்றார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா பேசுகையில், தமிழரசுக்கட்சியினர் பிற்போக்குவாதிகளுடன் சேர்ந்து அவர்களுக்கு உதவி வருகிறார்கள். ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் சேர்ந்திருக்கும் தமிழ்க்காங்கிரஸ் கட்சி தமிழ்மக்களின் பெருத்த ஆதரவுடைய கட்சியாகும் என்று தெரிவித்த அவர், தமிழ்மக்களைமேலும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லவேண்டாமென தமிழரசுக்கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்.

## உடல் உறுதிக்கு

அம்பன் திங்கள்

"உடல் உறுதியாக இருக்க வேண்டுமெனில் உடற் பயிற்சி மனிதனுக்கு அத்தியாவசியமாகும், எனவே தான் இன்றைய நிலையில் மக்கள் அரசானது விளையாட்டுத் துறைக்கு முக்கிய இடத்தை அளித்து வருங்கால இளம் சமுதாயத்தினரிடையே ஓர் சீர்திருத்த நிலையை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளதென விளையாட்டு அமைச்சின் ஆதரவில் நடைபெற்று வரும் கரபந்தாட்ட வாரத்தை அல்வாய் இளங்கோ விளையாட்டுக் கழகத்தில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே வடமராட்சி வடக்குக் கிழக்கு காரியாதிகாரி திரு மு. தம்பிமுத்து மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்: இளம் சந்ததியினர் தமது பொழுது போக்கை வீணை விடயங்களில் செலவழித்து வாழ்க்கையையே பாழாக்குகின்றனர். இவ்வாறாக இவர்கள் தங்கள் வாழ்க்கையை பாழாக்காது நல்வழிப்படுத்து முகமாக விளையாட்டு சங்கங்களை அமைத்து, அவற்றிற்கு வேண்டிய உபகரணங்களை அளித்து, விளையாட்டு மைதானங்களை அமைத்து அவற்றினைப் மேற்பார்வையிட்டு இளம் உள்ளங்களிடையே ஓர் புத்துணர்வை ஏற்படுத்தி அவர்களது எதிர்கால வாழ்க்கையை ஓர் சீரிய வாழ்க்கையாக உதவி புரியவே அரசு முன்வந்துள்ளதெனக் கூறினார்.

விளையாட்டு உத்தியோகத்தர் திரு க. கதிர்காமத்தம்பி விளையாட்டுத்துறைக்கு அரசு புரியும் உதவி பற்றி விளக்கிக் கூறினார்.

## இனிய பண்புகளின் உறைவிடம்

கோட்டை, ஞாயிறு

"ஈழத்துத் தமிழ்க்கவிதை உலகிலே மகாகவியாக விளங்கிய 'மகாகவி' அவர்களின் திடீர் மறைவு, எம் உள்ளத்தை எல்லையற்ற ஏக்கத்தில் ஆழ்த்தியுள்ளது."

கொழும்பு இலங்கை மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றம், மகாகவியின் திடீர் மரணம் குறித்துத் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது. அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இனிய கவிதைகள் பலவற்றைப் படைத்தளித்து எமக்கு உவந்தளித்த இப்பெருங்கவிஞன் இனிய பண்புகளின் உறைவிடமாகவும், விளங்கினார் தனக்கென்ற ஒரு தனிக் கொள்கையோடு உறுதியாக வாழ்ந்துவந்தபோதும் அவர் எவர் உள்ளத்தினையும் புண்படுத்தாது அனைவரையும் தன் அன்பு அரவணைப்பில் வைத்திருந்த பெருமகன் ஆவர். அவ்வன்புருவத்தை இன்று எண்ணுகின்றபோது கண்களில் நீர் பெருகவே செய்கிறது.

சாவைவென்றவர் உலகில் எவரும் இல்லை ஆகவே உலக இயற்கைக்கு அமைய சாவு இவரைவென்றது உண்மை ஆனுல் சாற்றுதற்கரியசாகா வரம்பெற்ற இவரது கவிதைகள் உயிரோட்டமுள்ளவை என்பதை எவரும் மறுக்க முடியாது. கவிஞன் மறைந்தது உண்மை. ஆனுல் மறையாப்புகழ்படைத்த அவர் கவிதைகள் ரசிகர்களை வாழ்விப்பதும் உறுதி"

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணக் கோட்டை முனீஸ்வரப் பெருமாள் தேவஸ்தான மணவாளக் கோல சங்காபிடேகத் தொடரில் இன்று பஞ்சரு சோதக அபிஷேகம் நடைபெறும்"

அம்பலவாணனும் அடியார்களும் என்ற தொடரில் அருட்கவி சி. விநாசித்தம்பி சங்கீதகதாப்பிரசங்கம் செய்வார்.

......

## மாணவி கடத்தப்பட்டார்

பருத்தித்துறை, ஞாயிறு

அச்சுவேலியைச் சேர்ந்த 16 வயதுடைய மாணவி ஒருவர் நேற்று முன்தினம் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது சில நபர்களால் கடத்தப்பட்டதாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் கிடைத்துள்ளது. பொலிஸார் புலன்விசாரணை செய்கின்றனர்.

## 'பெண் ஆசிரியை வேண்டும்'

நெடுங்கேணி ஞாயிறு

நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் கடந்த பல மாதங்களாகப் பெண் ஆசிரியை எவருமே கடமையாற்றவில்லை. எனவே உடனடியாக இம்மகாவித்தியாலயத்திற்குப் பெண் ஆசிரியை ஒருவரையாவது நியமிக்கும்படி வவுனியா மாவட்ட பிரதம கல்வி அதிகாரிக்கு நெடுங்கேணி கிராம முன்னேற்றச் சங்கக் காரியதரிசி திரு. த. ம. பீற்றர் பொன்கலன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இதற்கான இன்னொரு கடிதம் வவுனியா ஆட்சி மன்ற உறுப்பினர் திரு செல்லத்தம்புவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

......

## 'மகாகவி' மறைவுக்கு கிராமசபை அனுதாபம்

மாவிட்டபுரம், ஞாயிறு

அண்மையில் மறைந்த 'மகாகவி'க்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை மல்லாகம் கிராமச் சபை நிறைவேற்றியுள்ளது.

மகாகவியின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கவேண்டும் என்ற பிரேரணை ஒன்றை மல்லாகம் கிராமச் சபையின் கூட்டத்தில் 8ம் வட்டார அங்கத்தவர் திரு. காசிப்பிள்ளை (முருகையா) கொண்டுவந்தார்.

சபைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் இப்பிரேரணை ஏகமனதாக நிறைவேறியதுடன் அன்னாரது குடும்பத்துக்கு இத்தீர்மானத்தை அனுப்புவதாக முடிவாகியது.

......

## டிப்போக்கள் திருத்தி அமைக்கப்படும்

கோட்டை, ஞாயிறு

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் டிப்போக்கள் அவை பயன்படுத்தும் பஸ்களை நிறுத்தக்கூடிய வகையில் திருத்தியமைக்கப்படவிருக்கின்றன. இத்தகவலை போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு அனில் முனசிங்கா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இப்பொழுதுள்ள டிப்போக்கள் 125லிருந்து 200 பஸ்கள் நிறுத்தக்கூடிய முறையிலேயே கட்டப்பட்டிருந்தபொழுதிலும் 200 லிருந்து 300 பஸ்கள் வரை நிறுத்தப்படுகின்றன. இ. போ. ச. வினுல் சம்பாதிக்கப்படும் பணத்தைக்கொண்டே இந்த டிப்போக்கள் திருத்தி அமைக்கப்படவிருக்கின்றன.

## விளையாட்டுப் போட்டிகளை நேரத்துக்கு முடிக்கவேண்டும்

பருத்தித்துறை, ஞாயிறு

வடபகுதிப் பாடசாலைகளில் வழக்கம்போல இல்லங்களுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெற அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனுல் இப் போட்டிகள் வழக்கத்திலும் பார்க்க நேரத்துக்கு முன்னர் முடிவடையவேண்டும் என்றும், மாணவர்கள் வீடு திரும்புவதற்காக நேரவசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டுமெனவும் வடமாநிலக் கல்வியதிபதி திரு. டீ. சி. மகாதந்திலை பாடசாலை அதிபர்களுக்கு விடுத்துள்ள சுற்றுநிருபமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அநேகமாகச் சகல பாடசாலைகளிலும் போட்டிகள் நடக்கலாமெனத் தெரிகின்றது.

## நீரில் மூழ்கி மரணம்

மட்டக்களப்பு, ஞாயிறு

மண்முனை மேற்கு காரியாதிகாரி பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. கனகசிங்கம் அழகரட்ணம் காக்காத்தீவு வேலாயுத சுவாமி கோவிலுக்கு அண்மையில் உள்ள ஆற்றில் நீராடிய சமயம் நீரில் மூழ்கிமரணமானுர். இவர்மட்டக்களப்பு நகரசபையில் சிலவருடங்களுக்கு முன்பு உபதலைவராக விருந்தார். கிழக்கு மாகாணத்தின் சிறந்த விளையாட்டுவீரராக இவர் திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

## வீதி சீர்கேடு

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதிகிடங்கும் குழியுமாக இருப்பதனுல் நோயாளரும் மற்றும் பொதுமக்களும் போக்குவரத்துச் செய்வதில் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். இச் சீர்கேட்டை சுட்டிக்காட்டி மேலிடத்துக்குப்புகார் செய்யப்பட்டுள்ளது.

## நியமனமும் இடமாற்றமும்

பருத்தித்துறை, ஞாயிறு

கரணவாய் மணியகாரன் தோட்டம் பாடசாலை ஆசிரியர் திரு. எஸ். தம்பு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

செல்வி ஆர். இராசரத்தினம் விவசாய ஆசிரியையாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழ் மாகாணத்தைச் சேர்ந்த காரைதீவு மகாவித்தியாலய ஆசிரியர் திரு. எஸ். இரத்தினசிங்கம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

—

## மின்சாரக்கோளாறு

பருத்தித்துறை, ஞாயிறு

கடந்த சில தினங்களாக நெல்லியடிப் பகுதியில் மின்சாரக் கோளாறு காரணமாகப் பொதுமக்கள் பல வசதியீனங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். மாணவரின் படிப்புமட்டுமன்றி வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். மின்சாரக் கோளாறுக்கு சுன்னுகம் மின்சார நிலையமே காரணமெனக் கூறப்படுகிறது.

சிறந்த

தரமான

அச்சுவேலைகளுக்கு

'ஈழநாடு'

வர்த்தக அச்சகப்பகுதி

யாழ்ப்பாணம்.

அபிஷேகத் திரவியங்கள்

சந்தனக் குழம்பு

(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக் கட்டைகளால் தயாரிக்கப் பெற்றவை)

★ பழனி வாசனை விபூதி
★ அபிஷேக குங்குமம்
★ பஞ்சாமிர்த சாமான்கள்
★ நைவேத்திய சாமான்கள்
★ அஷ்ட பந்தன மருந்து

வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்

★ "ராதா" பத்மினி ஜவ்வாது பத்தி
★ 99 & 999 ஜவ்வாது பத்தி
★ சக்தி, பூஜா அகர் பத்திகள்
விளைவு சூடம், சாம்பிராணி

மற்றும்

கோவில் தேவைகளுக்கான
சகலவிதமான சாமான்களும் நிதானமான
விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

எஸ். சுப்பிரமணியம்

அன் கொம்பனி

53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு கொழும்பு-11. Residence: 7068 போன்: 35825

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

செல்வம் அழிவு உள்ளது ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவுள்ளது கல்வி அழிவில்லாதது ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவில்லாதது!

—நாவலர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சாதுமியாகம் விரோதிகிருது வருஷம் ஆனிமாதம் 14-ந் திகதி (28-6-71)

# சகலதுக்கும் அவரா?

தணிக்கை செய்யப்பட்டது

திரு. குமாரசூரியர் ஒரு தமிழர் என்பதாலும் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஒரேயொரு தமிழர் என்பதாலும் தமிழ்மக்கள் மீது அவர் கொண்டுள்ள அக்கறை, அன்பு காரணமாகவும் மொழிப் பிரச்னையில் மட்டுமல்ல, தமிழ்ப்பகுதிகளில் ஏற்படும் சகல பிரச்னைகளிலும் அவர் தலையிட்டு அந்தந்த நேரத்தில் எதை எதைச் செய்யமுடியுமோ அதையதைச்செய்ய முயலுகிறார்.

இதனால்தான் நாட்டின் போக்குவரத்து வசதிகள் பெரும் குழப்பமானநிலையிலிருந்த காலகட்டத்தில் நாட்டின் இப்பாகத்தில் உள்ள (யாழ் மாவட்டம்) நுகர்வோருக்குச் சகல அத்தியாவசியப் பொருள்களையும் வழங்குவதில் அளித்த சாத்தியமான உதவிகளுக்கும் தபால் தந்தி அமைச்சர் குமாரசூரியருக்கு நன்றியறிதலைத் தெரிவிப்பது என்று யாழ்ப்பாண மாநகரசபை தனது மாதாந்தக் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியிருந்தது.

இதுமட்டுமல்ல, வெங்காயத்தின் உத்தரவாத விலையை அதிகரிக்கவேண்டும் என்பதற்கும் வெங்காய உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அமைச்சர் குமாரசூரியரின் உதவியை நாடுகின்றனர். சிறந்த கட்டடக் கலைஞராக இருப்பதால் யாழ். நவீன சந்தைக் கட்டிடத்தைப் பார்த்து ஆலோசனை கூறுவதற்கும் அவரை அழைத்து உதவி கோருகின்றனர்.

தணிக்கை செய்யப்பட்டது

மற்றும் சிறுசிறு விஷயங்களுக்கும்கூடத் திரு. குமாரசூரியரைத் தேடி ஓடுகின்றவர்கள் பலர்.

கரும்பு இனிக்கிறதென்பதற்காக அதைவேரோடு பிடுங்கக்கூடாது என்பது தமிழில் உள்ள ஒரு பழமொழி. திரு. குமாரசூரியர் எல்லோருக்கும் நல்லவராக எவரையும் வரவேற்றுத்தகுந்த போசனைகள் கூறுவதால் சிறுசிறு விஷயங்களுக்கும் அவரையே நாடித் தொல்லைபடுத்துவது அவருக்கோ அவர்பிறந்த சமூகத்துக்கோ நல்லதல்ல.

அமைச்சர் குமாரசூரியர் தாம் கலந்துகொள்ளும் எந்தவைபவங்களிலும் தேசிய ஒற்றுமையையும் நாட்டின் ஒருமைப்பாட்டையும் பற்றி வலியுறுத்தி வருகிறார். தமிழர், சிங்களவர் என்று நினைக்காமல் இலங்கையர் என்று இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் கருதவேண்டுமென்று அவர் கூறிவருகிறார்.

அவர் என்னதான் புத்திமதி கூறியபோதிலும் தமிழர் பலரும் சிறிய விஷயங்களுக்கும் அவரின் உதவியையே நாடி ஓடுகின்றனர்.

அவர் தமிழர் என்பதால்மட்டுமல்ல விஷயந் தெரிந்தவர், தேசிய ஒருமைப்பாட்டில் அக்கறையும் ஆர்வமும் உள்ளவர், ஆற்றலும் அறிவும் உள்ளவர் என்பதற்காகவும் தான் திரு. குமாரசூரியரை தமது அமைச்சரவையில் ஒருவராகப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா சேர்த்திருக்கவேண்டும். நாளுக்குநாள் சீர்கேடடைந்து வரும் தபால் தந்திச் சேவையைச் சீர்திருத்துவதற்குத் திரு. குமாரசூரியரே பொருத்தமானவர், தகுதியானவர் என்பதால் தான் தபால் தந்தி இலாகாப் பொறுப்பை பிரதமர் அவரிடம் ஒப்படைத்திருக்க வேண்டும்.

திரு. குமாரசூரியர் இந்த அமைச்சின் பொறுப்பையேற்று ஒருவருடத்துக்கு மேலாகியும் அந்த இலாகா சீரடையாமல் மேலும் மோசமாகிவருகிறதென்றால் அதற்குத் திரு குமாரசூரியர் மீது மட்டும் குறைசொல்வதற்கு இடமில்லை. தமது அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி தபால் தந்திப்பகுதியைச் சீர்திருத்துவதற்குத் தமிழர்கள் தான் விடவில்லையென்றும் தமிழர்களால் தான் திரு, குமாரசூரியர் தனது கடமையைச் செவ்வனே செய்யவில்லையென்றும் ஒரு கெட்டபெயர் ஏற்படக்கூடாது திரு. குமாரசூரியரும் இதற்கு இடம் வைக்காமல் சில்லறை விஷயங்களை விடுத்து சீர்கெட்டுப்போகும் தபால் தந்திப் பகுதியைச் சீர்திருத்த தமது அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்த முன்வரவேண்டும்.

> தணிக்கை அதிகாரியினால் தணிக்கை செய்யப்பட்ட பின் இத்தலையங்கம் பிரசுரமாகிறது.

# 3 ஆசிரிய கலாசாலைகள் மூடப்படுமாம்

கோட்டை, ஞாயிறு

அடுத்தாண்டு ஜனவரி முதல் நாட்டில் உள்ள ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் 3 கல்லூரிகளை மூடுவதற்கு கல்வியமைச்சுத் தீர்மானித்துள்ளது.

நல்லூர், கொட்டவா, எல்வத்த ஆகிய இடங்களிலுள்ள பயிற்சிக்கல்லூரிகளே மேற்படி 3 கல்லூரிகளுமாகும். வருடமொன்றிற்கு இக்கலாசாலைகள் ஒவ்வொன்றும் 100 ஆசிரியர்களுக்கே பயிற்சியளிப்பதால் இக்கல்லூரிகளை நடாத்துவதால் கூடியபயன் எதுவும் இல்லை என அமைச்சு கருதுகிறது

ஹோமாகமவில் விவசாயப் பயிற்சிக்கு ஒரு பயிற்சிக் கல்லூரி நிறுவப்படவிருக்கிறது. நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெறுபவர்கள் அடுத்தாண்டு தொடக்கம் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் அனுமதிக்கப்படுவர்.

## ஆசிரியர்களுக்கு மீண்டும சந்தர்ப்ப விடுதலை

யாழ்ப்பாணம். திங்கள்

பயங்கரவாத நடவடிக்கைகள் இடம்பெற்ற நாளிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஆசிரியர்களுக்கான சந்தர்ப்ப விடுமுறையை மீண்டும் ஆசிரியர்கள் பெறுவதற்கு கல்வியமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக வடமாகாண ஆசிரியசங்க செயலாளர் திரு எஸ் சபாநடேசன் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இதற்கான சுற்று நிருபம் ஒன்றை சகல ஆசிரியர்களுக்கும் மேற்படி சங்கம் விரைவில் அனுப்பிவைக்கும் என்றும் அவர் கூறினார்.

# சுவீப்முடிவுகள்

கொழும்பு, சனி

கடந்த வியாழக்கிழமை குருநாகலையில் நடைபெற்ற 352-வது தேசிய சுவீப் சீட்டிழுப்பின் முடிவுகள்வருமாறு:

1-வது பரிசு
31 C 0278 ரூ. 80,340

2-வது பரிசு
29 B 0335 ரூ. 32,136

3-வது பரிசு
11 C 0192 ரூ 8,034

தலா ரூ. 401-70 பெறும் 100 ஆறுதல் பரிசுகள்:

| | |
|---|---|
| 02 A 0915 | 28 M 0082 |
| 17 A 0655 | 16 N 0224 |
| 31 A 0431 | 30 N 0881 |
| 19 B 0893 | 07 O 0867 |
| 21 B 0675 | 18 O 0485 |
| 27 B 0299 | 20 O 0615 |
| 13 C 0202 | 23 O 0205 |
| 18 C 0912 | 23 O 0755 |
| 20 C 0696 | 21 C 0868 |
| 25 C 0845 | 30 C 0885 |
| 18 D 0372 | 33 D 0767 |
| 03 E 0306 | 11 E 0796 |
| 21 E 0200 | 27 O 0312 |
| 30 E 0902 | 32 Q 0016 |
| 36 E 0518 | 17 R 0626 |
| 06 F 0312 | 24 R 0557 |
| 06 F 0724 | 26 R 0036 |
| 15 F 0433 | 32 R 0361 |
| 31 F 0351 | 34 R 0250 |
| 06 G 0364 | 35 R 0086 |
| 13 G 0352 | 35 R 0169 |
| 30 O 0026 | 30 O 0994 |
| 09 P 0730 | 14 P 0791 |
| 18 P 0838 | 35 P 0537 |
| 36 P 0545 | 19 Q 0058 |
| 24 G 0239 | 06 S 0992 |
| 29 G 0366 | 24 S 0507 |
| 33 G 0103 | 31 S 0049 |
| 01 H 0461 | 31 S 0116 |
| 06 H 0968 | 35 S 0843 |
| 10 H 0792 | 04 T 0659 |
| 20 H 0417 | 27 T 0836 |
| 21 H 0167 | 36 T 0743 |
| 25 H 0161 | 07 U 0907 |
| 16 J 0923 | 01 V 0986 |
| 17 J 0729 | 11 V 0314 |
| 23 J 0740 | 32 V 0076 |
| 24 J 0702 | 01 W 0262 |
| 23 K 0183 | 11 W 0749 |
| 24 K 0217 | 16 W 0014 |
| 33 K 0790 | 17 W 0665 |
| 35 K 0782 | 23 W 0298 |
| 03 L 0311 | 24 W 0791 |
| 03 L 0623 | 33 W 0598 |
| 05 L 0363 | 04 X 0964 |
| 16 L 0312 | 35 X 8415 |
| 01 M 0568 | 35 X 0791 |
| 04 M 0594 | 08 Y 0210 |
| 14 M 0919 | 31 Y 0570 |
| [illegible] | [illegible] |

## யாழ்.நகரில் ...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சமன்றத் திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். இம் மன்றத் திறப்பு விழாவையொட்டி பௌத்தரசன சங்கப் பகுதிப் பதிவுக்காரரான திரு.உபசேன காதுவாராச்சி அனுப்பிய செய்தியில் இம் மன்றம் சமயசமரசத்திற்கு உழைக்க முயலவேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்

காலை 9 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் வழிபாடுகள் நடத்தியபின் சிதம்பர நடராசப் பெருமானது திருவுருவப்படம் ஊர்வலமாக மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது பின்னர் முதலியார் திரு.செ சின்னத்தம்பி மன்றத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

இவ்வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய முதலியார் திரு.செ.முத்துத்தம்பி தமிழர் தம் பழம் பெருமைகளையும், வாழ்க்கை முறைகளையும், நாகரிகம் பண்பாடுகளையும் பேணிப் பாதுகாக்கத் திருமுறைகள் பேணப்பட வேண்டுமெனச் சொன்னார்.

மன்ற அமைப்பாளர் திரு க.மாணிக்கவாசகர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

'உலகம் கண்ட உத்தம ஞானிகளுள் ஒரு மாபெரும் ஞானியாய் இலங்குபவர் மணிவாசகப் பெருமான். தொன்மை பெருநெறியான சைவத்திருநெறியின் ஞானப் பெருங்குரவர் அவர். பண்டைக்காலம்போன்று சைவர்கள் நெஞ்சமெல்லாம் திருவாசகத் தேனூறி நிற்கும் நிலை மீண்டும் ஏற்படவேண்டும். அதனால் சைவ மறுமலர்ச்சிஏற்படும்' என்று திரு. மாணிக்கவாசகர் தமதுஉரையில் தெரிவித்தார்.

இம்மன்றம் இப்பெரு நோக்கத்தில் ஒருசிறுபங்கை யாவது சாதிக்க வேண்டுமென்பதே தமது ஆசையென அவர் சொன்னார்.

திரு. எஸ்.வடிவேல் திருவாசகப் பதிகங்களைப் பாடினார்.

மாகேஸ்வர பூசையும் இடம்பெற்றது. இவ் வைபவத்தில் பல சைவ அபிமானிகள் கலந்து கொண்டனர். மாநகரசபை வட்டார உறுப்பினர் திரு. என். ரி செல்லத்துரையும் வந்திருந்தார்.

## குருப்பூர் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் வருகிறமாதம் 8-ம்திகதி முதல் 16-ந் திகதி வரை நல்லூர் சட்டநாதர்கோவில் வீதியில் உள்ள திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். அன்றைய தினம் விசேட பூசைகளும் ஆராதனைகளும் பஜனைகளும் சொற்பொழிவுகளும் இடம் பெறும். பதினேந்தாம்திகதி மகேஸ்வரபூஜையும் இடம் பெறும்.

## வட்டமேசை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரக்கட்சி முன்னால் நின்று கழுத்தை நெரிக்கிறது. ஐ தே.கட்சியிலிருந்து நழுவி தப்பி வந்து விட்டோம். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியிடமிருந்து திமிறி நழுவிச் செல்லவேண்டியுள்ளது. உண்மையான சோஷலிசம் இந்த நாட்டில் ஏற்படுத்தப்படுமானால் 6 வருடமென்ன 60 வருடங்கள் சபை எல்லையை நீட்டினாலும் மக்கள் கவலைப்படமாட்டார்கள். சிங்கள மக்கள் நியாயத்துடன் நடப்பவர்கள் அவர்களுக்கு நியாயத்தை எடுத்துச்சொன்னால் உண்மையை உணர்வார்கள். ஆனால் தலைவர்கள் உண்மையைச்சொல்லப் பயப்படுகிறார்கள் என்றார்.

நியமன எம்.பி திரு எம் ஸி, சுப்பிரமணியம் பேசுகையில். பெரும்பான்மை மக்களின் ஒத்துழைப்பின்றி சிறுபான்மை மக்கள் இழந்த உரிமைகளை மீட்க முடியாதென்ற உண்மையை உணர தமிழரசுக்கட்சியினர் மறந்துவிட்டனர். யதார்த்த நிலையில் பார்த்தால் இன்றிருக்கும் நிலைமைப்பேல வேறு நல்ல சூழல் எப்பொழுதுமிருந்ததில்லை அரசியல் சட்டம் நிலைத்திருப்பதில்லை. அது காலத்துக்கேற்ப மாற்றம் பெறக்கூடியது. இந்த அரசாங்கத்திடமிருந்து பெறமுடியாத உரிமையை வேறு எந்த அரசிடமிருந்தும்தமிழர் பெற்றுவிடமுடியாது என்றார்.

யாழ்ப்பாண மாநகர

மலநோக்குக்

கூட்டுறவுச் சங்கம்

பின்வரும் பதவிகளுக்கான இடங்கள் காலியாகவுள்ளன. இப் பதவிகள் தற்காலிகமானவை என்பதுடன் நிரந்தர நியமனம் வழங்கப்படுமெனவும் உத்தரவாதம் அளிக்கப்படமாட்டாது.

1. தற்காலிக களஞ்சியப் பொறுப்பாளர்;

தகைமைகள்: சாதாரண பொதுத் தராதரப்பத்திரம். (ஜி. சி. ஈ.)

ரொக்கப்பிணை: 2000/-
ஆதனப்பிணை: 5000/-

2 தற்காலிக ஸ்தாபன முகாமையாளர்.

தகைமைகள்: சாதாரண பொதுத்தராதரப் பத்திரம் ஜி சி ஈ.

ரொக்கப்பிணை: 1000/-
ஆதனப்பிணை: 2500/-

விண்ணப்ப முடிவு திகதி: 5-7-71

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி
செயலாளர்,
யாழ்ப்பாண மாநகர மலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
74/3 ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

க. தியாகலிங்கம்
பொதுமுகாமையாளர்
ஆ. த. துரையப்பா
தலைவர்.

2872

தேவை

சமையல்காரர்கள்:

முதல்தரமான சோறுகறி மரக்கறி உணவுகள் மற்றும் யாழ்ப்பாண நும்பமான உணவுவகைகள் தயாரிப்பதற்கு அனுபவமுள்ள சமையல்காரர்கள் தேவை: நேரில் விண்ணப்பிக்கவும். பல்மேரு கொட்டேஜ். பிரதானவீதி யாழ்ப்பாணம்.

2221

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வேண்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org